# TNPSC-IV

# பொதுத் தமிழ்

## ஆறாம் வகுப்பு: வாழ்த்து

### திருவருட்பா

கண்ணில் கலந்தான் கருத்தில் கலந்தான்என்
எண்ணில் கலந்தே இருக்கின்றான் - பண்ணில்
கலந்தான்என் பாட்டில் கலந்தான் உயிரில்
கலந்தான் கருணை கலந்து

* திருவருட்பாவை எழுதியவர் - இராமலிங்க அடிகளார்
* சிறப்பு பெயர் - திருவருட்பிரகாச வள்ளலார்
* பிறப்பிடம் - கடலூர் மாவட்டம் மருதூரில் பிறந்தவர்.
* பெற்றோர் - இராமையா - சின்னமையார்
* வாழ்ந்த காலம்: 05.10.1823 - 30.01.1874
* எழுதிய நூல்கள்: ஜீவகாருண்ய ஒழுக்கம், மனுமுறைகண்ட வாசகம்.
* பசித்துயர் போக்கி மக்களுக்கு உணவளிக்க இராமலிங்க அடிகளார் அமைத்தது - அறச்சாலை
* அறிவு நெறி விளங்க வள்ளலார் நிறுவியது - ஞானசபை
* சமர சன்மார்க்க நெறிகளை வழங்கியவர் - இராமலிங்க அடிகளார்.
* இராமலிங்க அடிகளார் பாடிய பாடலின் தொகுப்பிற்கு பெயர் - திருவருட்பா.
* வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடிய மனம் கொண்டவர் - இராமலிங்க அடிகளார்
* வள்ளலார் பாட்டை "மருட்பா" என்று கூறியவர் - ஆறுமுக நாவலர்.
* கடவுளை "கண்ணில் கலந்தான் கருத்தில் கலந்தான் ", என்றும் "உயிரில் கலந்தான் கருணை கலந்து" என்றும் பாடியவர் - இராமலிங்க அடிகளார்.
* நூல்கள்: ஜீவகாரூன்ய ஒழுக்கம், மனுமுறை கண்ட வாசகம்.
* வள்ளலாரின் பாடல்கள் அனைத்தும் திருவருட்பா என்னும் தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ளன.
* **சிறப்பு:** சமரச சன்மார்க்க நெறியை வழங்கினார்.
* மத நல்லிணக்கத்திற்கு சன்மார்க்க சங்கத்தையும் , உணவளிக்க அறச்சாலை , அறவுநெறி விளங்க ஞான சபையையும் நிறுவினார்.
* வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய கருணை மனம் இவருடையது.
* கருணை நிறைந்த இறைவன் என் கண்ணில், சிந்தனையில், எண்ணத்தில், பாட்டில், பாட்டின் இசையில், என் உயிரில் கலந்து இருக்கிறான்.

**அறிவுரைப் பகுதி**: திருக்குறள்: அன்புடைமை

**சொற்பொருள்**:

ஆர்வலர் - அன்புடையவர்

புன்கணீர் - துன்பம் கண்டு பெருகும் கண்ணீர்

என்பு - எலும்பு. இங்கு உடல், பொருள், ஆவியைக் குறிக்கிறது.

வழக்கு - வாழ்க்கை நெறி

நண்பு - நட்பு

மறம் - வீரம், கருணை (வீரம் இரண்டிற்குமே

அன்புதான் அடிப்படை என்பது பொருள்)

அன்பிலது - அன்பில்லாத உயிர்கள்

என்பிலது - எலும்பில்லாதது(புழு)

பூசல் தரும் - வெளிப்பட்டு நிற்கும்

ஆருயிர் - அருமையான உயிர்

ஈனும் - தரும்

ஆர்வம் - விருப்பம் (வெறுப்பை நீக்கி விருப்பத்தை

உண்டாக்கும் என்று பொருள்)

வையகம் - உலகம்

என்ப - என்பார்கள்

புறத்துறுப்பு - உடல் உறுப்புகள்

எவன் செய்யும் - என்ன பயன்?

அகத்துறுப்பு - மனத்தின் உறுப்பு, அன்பு

**பிரித்து எழுதுக**:

அன்பகத்தில்லா = அன்பு + அகத்து + இல்லா -

அன்பு உள்ளத்தில் இல்லாத

வன்பாற்கண் = வன்பால் + கண் - பாலை நிலத்தில்

தளிர்த்தற்று - தளிர்த்து + அற்று - தளிர்த்ததுபோல

வற்றல்மரம் - வாடிய மரம்

* இவரின் காலம் கி.மு. 31 என்று கூறுவர்.

* இதனை தொடக்கமாக கொண்டே திருவள்ளுவர் ஆண்டு கண்க்கிடப்படுகிறது.

* சிறப்பு பெயர்: தெய்வப்புலவர், நாயனார், செந்நாப்போதர்

Padasalai

* இந்நூல் அறத்து ப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என மூன்று பெரும் பிரிவுகளை உடையது.

* அதிகாரங்கள்: 133

* அதிகாரத்திற்கு 10 குறட்பாக்கள் வீதம் 1330 குறட்பாக்கள் உள்ளன.

* இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

* திருக்குறளின் வேறு பெயர்கள் : உலக பொதுமறை , முப்பால், தமிழ்மறை. உலகப் பொதுமறை எனப் போற்றப்படுகிறது.

* திருவள்ளுவர் ஆண்டு கணக்கிடும் முறை : கிறித்து ஆண்டு (கி.பி) + 31 = திருவள்ளுவர் ஆண்டு.

எடுத்துக்காட்டு: 2013 + 31 = 2044. கி.பி.2013ஐத் திருவள்ளுவர் ஆண்டு 2044 என்று கூறுவோம்.

**உரைநடை: தமிழ்த்தாத்தா உ.வே.சா.**

* உ.வே.சா ஓலைசுவடி வேண்டி ஒருவரிடம் உரையாடிய நிகழ்ச்சி நடைபெற்ற இடம் ஈரோடு மாவட்டம் கொடுமுடி.

* ஊர் - திருவாரூர் மாவட்டம் உத்தமதானபுறம்

* இயற்பெயர் - வேங்கடரத்தினம்

* ஆசிரியர் - மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை.

* அவரின் ஆசிரியர் வைத்த பெயர் - சாமிநாதன்

* உத்தமதானபுரம் வேங்கடசுப்பையர் மகனான சாமிநாதன் என்பதன் சுருக்கமே உ.வே.சா

* இவரின் தந்தை - வேங்கடசுப்பையா

* காலம் - 19.02.1855 முதல் 28.04.1942

* 1942 இல் உ..வே.சா நூல்நிலையம் சென்னை பெசன்ட் நகரில் துவங்கப்பட்டது.

* உ.வே.சா நினைவு இல்லம் உத்தமதானபுரத்தில் உள்ளது.

* உ.வே.சா அவர்களின் தமிழ்ப் பணிகள் வெளிநாட்டு அறிஞர்களான ஜி .யு.போப், சூலியல் வின்சோன் ஆகியோர் பெரிதும் பாராட்டியுள்ளனர்.

* இந்திய அரசு 2006 ஆம் ஆண்டு அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.

* பனை ஓலையைப் பக்குவப்படுத்தி , அதில் எழுத்தாணி கொண்டு எழுவர் . அவ்வாறு எழுத்தப்பட்ட ஓலைக்கு ஓலைச்சுவடி என்று பெயர்.

* ஓலை கிழியாமல் எழுதுவதற்காக ஓலைச்சுவடி எழுத்துகளில் புள்ளி இருக்காது ; ஒற்றைக்கொம்பு, இரட்டைகொம்பு வேறுபாடு இருக்காது.

* ஓலைச்சுவடிகள் பாதுகாக்கப்படும் சில இடங்கள் : 1. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் , சென்னை. 2. அரசு ஆவணக் காப்பகம் , சென்னை. 3. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் , சென்னை 4. சரசுவதி நூலகம், தஞ்சாவூர்.

* குறிஞ்சிப்பாட்டு - பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று; இதன் ஆசிரியர் கபிலர்.

* தம் வாழ்க்கை வரலாற்றை ஆனந்தவிகடன் இதழில் தொடராக எழுதினார். அ்து என் சரிதம் என்னும் பெயரில் நூலாக வெளிவந்தது.

* ஓலைச்சுவடிகளைத் தேடி வந்த பெரியவர் - உ.வே.சா

* உ.வே.சா. தம் வாழ்நாள் முழுவதும் ஓய்வில்லாமல் பதிப்பு பணியை மேற்கொண்டார்.

* உ.வே.சா. அவர்களை நாம் தமிழ்த்தாத்தா என அன்போடும் உரிமையோடும் அழைக்கின்றோம்.

* ஓலைச்சுவடிகளை ஆடிப்பெருக்கு விடியற்காலையில் ஆற்றில் விட்டனர்.

* குறிஞ்சிப்பாட்டில் இடம்பெற்றுள்ள பூக்களின் எண்ணிக்கை - தொண்ணூற்று ஒன்பது

* உ.வே.சா பதிப்பித்த நூல்கள்:

எட்டுத்தொகை - 8

பத்துப்பாட்டு - 10

சீவகசிந்தாமணி - 1

சிலப்பதிகாரம் - 1

மணிமேகலை - 1

புராணங்கள் - 12

உலா - 9

கோவை - 6

தூது - 6

வெண்பா நூல்கள் - 13

அந்தாதி - 3

பரணி - 2

மும்மணிக்கோவை - 2

இரட்டைமணிமாலை - 2

பிற பிரபந்தங்கள் - 4

Padasalai

**துணைப்பாடம்: கடைசிவரை நம்பிக்கை**

* கடைசிவரை நம்பிக்கை இச்சிறுகதை அரவிந்த் குப்தா எழுதிய டென் லிட்டில் பிங்கர்ஸ் என்ற தொகுப்பில் உள்ளது.

* சடகோ சகாகி, 11 வயது ஜப்பான் நாட்டுச் சிறுமி.

* ஜப்பானில் ஹிரோமிமாவிக்கு அருகில் பெற்றோருடன் வசித்து வந்தாள்.

* அணுகுண்டு வீச்சால் ஏற்பட்ட கதிர்வீசி ன் காரணமாக சடகோவிற்கு புற்றுநோய் பாதிப்பு * ஏற்பட்டது.

* சடகோவின் தோழி சிசுகோ , சடகோவிடம் காகிதத்தால் செய்யப்பட்ட கொக்குகள் ஆயிரம் செய்தால் நோய் குணமாகும் என்றாள். இது நம் நாட்டு நம்பிக்கை என்று கூறினாள்.

* ஜப்பானியர் வணங்கும் பறவை - கொக்கு.

* காகிதத்தால் உருவங்கள் செய்யும் ஜப்பானியர் ஓரிகாமி என்று கூறுவர்.

* 1955 அக்டோபர் 25ல் நல்ல சடகோ இறந்தாள்.

* மொத்தம் 644 காகித கொக்குகள் உருவாக்கி இருந்தாள்.

* சடகோவின் தோழிகள் கூடி மீதமுள்ள 356 காகித கொக்குகள் செய்து எண்ணிக்கையை ஆயிரம் ஆக்கினர். சடகோவின் விருப்பத்தை நிறைவு செய்தனர்.

* சடகோவிற்காக அவள் தோழிகள் பொதுமக்களிடம் நிதி திரட்டி நினைவாலயம் கட்டினர் . அதனுள் சடகோவிற்கு சிலை எழுப்பினர்.

* அதன் பெயர் குழந்தைகள் அமைதி நினைவாலயம்.

* நினைவாலயத்தில் எழுதப்பட்ட வாசகம் - உலகத்தில் அமைதி வேண்டும் ! இது எங்கள் கதறல்! இது எங்கள் வேண்டுதல்!

www.Padasalai.Net